மாண்புமிகு உறுப்பினரவர்களின் கருத்தைப் பத்திரிகைக்காரர்கள் கூடுமான வரையிலே தங்கள் பத்திரிகையிலே போடாமலிருந்தால் உதவிகரமாக இருக்கும். வெளிவரும் விளம்பரங்கள் ஆபாசமாக இருக்குமானால், அவைகளை அகற்றிவிடுவது பற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு. கே. ராஜாராம்: மதுவிலக்குச் சட்டத்திலேயே இது ஒரு பகுதியாக ஏற்று அமல்படுத்தப்பட்டது. மதுவிலக்குச் சட்டம் ரத்தானதால் இதுவும் ரத்தாயிற்று. இதற்குத் தனிச் சட்டம் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இருந்து ஒருவேளை ரத்து செய்யப்பட்டு விட்டதா, இல்லாவிட்டால் அதற்கு என்னென்ன செய்யலாம் என்பதை அறிந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

4-10 பிற்பகல்

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, பெரிய சாலைகளிலும் முக்கியமான தெருக்களிலும் 'இதோ சாராயக் கடை', 'இதோ கள்ளுக் கடை' என்று மனதை ஈர்க்கின்ற வகையில் பெரிய எழுத்துக்களில் போர்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை அகற்ற சர்க்கார் ஏதேனும் செய்யுமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இப்படி கடைக்கு போர்டு போடுவதால், மனது ஈர்க்கப்பட்டது என்பதற்கு அர்த்தம் கிடையாது. திரு. ரா. கி. போன்றவர்கள் ஈர்க்கப்பட மாட்டார்கள். அப்படிப்பட்ட மன வலிமை வாய்ந்தவர்களை இந்த போர்டு ஈர்த்து விடாது. ஆனாலும் அரசு ஆலோசித்து தேவையான முடிவை மேற்கொள்ளும்.

Private School at Mandagappadi

* 261 Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Manager of the private school at Mandagappadi of Vridhachalam Educational District has appealed to the Government, after the Government had ordered the cancellation of the recognition of the school due to its mal-administration and its subsequent confirmation by the High Court of Madras; and

(*b*) the action taken thereon by the Government?

1973 மார்ச் 26]

மண்டகப்பாடி தனியார் ஆரம்பப் பள்ளி

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விருத்தாசலம் கல்வி மாவட்டத்தில் தவறான நிர்வாகக் காரணத்தை முன்னிட்டு, மண்டகப்பாடி தனியார் துறை துவக்கப் பாடசாலைக்கு அளிக்கப் பட்டிருந்த அங்கீகாரத்தை அரசு ரத்து செய்து உயர்நீதி மன்றம் அவ்வுத் தரவை உறுதி செய்தபின் அந்த நிர்வாகி அரசிடம் மேல் முறையீடு ஏதும் செய்தாரா ?

(இ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அரசு அம் மேல்முறையீட்டினைப் பரிசீலனை செய்து, ஒரு சில நிபந்தனைக்குட்பட்டு, மண்டகப்பாடி தனியார் ஆரம்பப் பள்ளிக்கு மீண்டும் ஏற்பையும் மானியத்தையும் அளிக்கலாம் என ஆணையிட்டது. பின்னர், பள்ளிக் கல்வி இயக்குநர் அரசுக்குத் தெரிவித்த மாறுபட்ட சூழ்நிலையில், வேறு சில காரணங்களுக்காக அப்பள்ளியின் ஏற்பும் மானியமும் ரத்துச் செய்யப்பட்டு 1—8—1972 அன்று ஆணையிடப்பட்டது.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இந்தப் பள்ளியில் இதற்கு முன்னால் பணியாற்றிய ஆசிரியர்கள் இப்போது மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டார்களா, மாணவர்கள் என்ன ஆனார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த மண்டகப்பாடி என்ற ஊரில் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக ஒரு பள்ளி ஏற்படுத்தப்பட்டு அதில் ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, ஆசிரியர்கள் அனைவரும் சேர்க்கப் படாமல் இன்னும் சில பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அப்படிச் சேர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மானியம் கொடுப்பதில் சில சங்க டங்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கிராமக் கூட்டு மன்றத்தினால் ஒரு பள்ளி ஆரம்பிக்கப்பட்டதும், தனியார் பள்ளியில் உள்ள எல்லா ஆசிரியர்களும், மருதநாயகம் உள்ளிட்ட எல்லா ஆசிரியர்களும், எடுத்துக்கொள்ளப்பட்டார்கள் என்று கூறியிருக்கிறார்கள். அப்படி யாராவது

சேர்த்துக்கொள்ளப்படாமலிருந்தால், கவனத்திற்குக் கொண்டுவந்தால், நடவடிக்கை எடுக்கலாம்.

Hindi Pandits

* 262 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any representation has been received from the erstwhile Hindi Pandits Association of Tamil Nadu in August, 1972 praying that fully qualified Hindi Pandits may be given facilities for Secondary Grade training; and

(*b*) if so, the action taken thereon?

இந்தி ஆசிரியர்கள்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்தி ஆசிரியராக முழுத் தகுதி பெற்றுள்ளவர்களுக்கு இடைநிலைத் தர ஆசிரியப் பயிற்சி பெற வசதிகள் செய்து தருமாறு 1972 ஆகஸ்டு திங்களில் தமிழ்நாடு முன்னுள் இந்தி ஆசிரியர் சங்கத்திடமிருந்து முறையீடு எதுவும் அரசால் பெறப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, நம் தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய இந்தி ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்கள் 1968-க்குப் பின்பு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகு, அவர்களையும் இந்த மாதிரி செகண்டரி கிரேட் குறுகிய காலப் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முறையிட்டிருக்கிருர்கள். அதனுடைய பிரதிகள் எல்லோருக்கும் அனுப்பப்பட்டன. கல்வி இலாகாவிற்கும் இதுபற்றி அனுப்பப்பட்டிருக்கிறது. இது அரசின் பரிசீலனையில் இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றிருப்பார்களாஞல், இத்தகைய வாய்ப்பைப் பெறுகிருர்கள். எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெருமல், இந்தி மொழியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இந்தி ஆசிரியர் கிரேடு ஒன்று, இரண்டு என்று இருக்கக்